# புனித இரவில் பாஸ்கா திருவிழிப்பு

(அருள்பணியாளர் இல்லாதபோது குடும்பங்களில் செபிக்க)

அனுமதி

மேதகு பேராயர் அந்தோணி ஆனந்தராயர்,

தலைவர், தமிழக ஆயர் பேரவையின்

திருவழிபாட்டுப் பணிக்குழு

தயாரிப்பு


அருள்பணி. முனைவர் S. அற்புதராஜ்

பொதுச்செயலர்

தமிழகத் திருவழிபாட்டுப் பணிக்குழு

முப்பணி மையம், திண்டிவனம்


2020

# புனித இரவில் பாஸ்கா திருவிழிப்பு

## (அருள்பணியாளர் இல்லாதபோது குடும்பங்களில் செபிக்க)

### முன்னுரை

பிரிமானவர்களே! இருளின் பிடியிலும் மரண நிழலிலும், அடிமையின் ஆதிக்கத்திலும் வாழ்ந்த இஸ்ரயேல் மக்களுக்குத் தான் தேர்ந்துகொண்ட மோசே வழியாக கடவுள் விடுதலையளித்தார். ஒளியின் பாதையிலே அவர்களை வழிநடத்திச் சென்று, பாலும் தேனும் பொழியும் கானான் தேசத்திலே கரைசேர்த்து தம் மக்களைப் பேருவகை கொள்ளச் செய்தார் இறைவன்.

இலட்சிய வாழ்வில் கட்டாயம் துன்பங்கள் இருக்கும். ஆனால் அந்தத் துன்பங்கள் ஒருபோதும் இலட்சியத்தைச் சிதைக்க இயலாது. இறுதியில் இலட்சியம் மட்டுமே வெல்லும் என்பதைத் தான் இயேசுவின் உயிர்ப்பு நமக்கு நிரூபித்துக் காட்டுகின்றது. எனவே, இருளிலிருந்து ஒளிக்கும், சாவிலிருந்து வாழ்விற்கும் கடந்து சென்ற கடவுளை வழித்துணையாகவும் வாழ்வாகவும் கொண்டு, நமது பயணத்தைத் தொடர்வோம். இதுவே நமது பாஸ்கா. நம் பாடுகளும், துன்பங்களும் நம்மைக் கடந்து போகும். நாமும் புத்துயிர், புதுவாழ்வு பெற்று எழுவோம் என்னும் நம்பிக்கையில் இத்திருச்சடங்கில் பங்கெடுப்போம்.

தலைவர் : தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே.

எல் : ஆமென்.

தலைவர் : அன்புமிக்க சகோதர சகோதரிகளே, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து சாவிலிருந்து வாழ்வுக்குக் கடந்து சென்ற புனிதமிக்க இவ்விரவில் திரு அவை உலகெங்கும் பரந்து வாழும் தன் மக்களை விழித்திருக்கவும் மன்றாடவும் ஒன்றுகூடுமாறு அழைக்கின்றது. இவ்வாறு இறை வார்த்தையைக் கேட்டும் அவருடைய மறைநிகழ்வுகளைக் கொண்டாடியும் அவருடைய பாஸ்காவை நாம் நினைவுகூர்ந்தால், சாவின்மீது அவர் கொண்ட வெற்றியில் நாமும் பங்குபெறுவோம், அவரோடு இறைவனில் வாழ்வோம் என்னும் எதிர்நோக்கைக் கொண்டிருப்போம்.

***அருள்பணியாளர் புதுத் தீயிலிருந்து பாஸ்கா திரியைப் பற்றவைத்துச் சொல்கின்றார்:***

**மாட்சியுடன் உயிர்த்தெழும் கிறிஸ்துவின் ஒளி இதயத்திலும் மனதிலும் இருள் அகற்றுவதாக.**

## பாஸ்கா புகழுரை

*பிரியமானவர்களே, இப்போது பாஸ்கா புகழுரை மகிழ்ச்சியோடு பாடப்படுகிறது. எகிப்தின் அடிமைத்தளையிலிருந்து விடுதலை பெற்று, செங்கடலைக் கடந்து வந்த இஸ்ரயேல் மக்கள், மிகுந்த ஆனந்தத்தோடு இறைவனைப் போற்றிப் பாடினர். இன்று தனது ஒரே மகனின் உயிர்ப்பு வழியாக நம்மைப் பாவத்தின் அடிமைத்தனத்தினின்று மீட்டு, அருள்வாழ்விற்கு அழைத்துச் செல்லும் இறைவனின் வல்ல செயல்களை நினைவுகூர்ந்து பாஸ்கா புகழுரை பாடப்படுகின்றது. நாம் அனைவரும் எரியும் மெழுகுத்திரிகளைக் கையில் ஏந்தி, அப்புகழுரையைக் கேட்டு இறைவனை துதிப்போம்.*

## பாஸ்கா புகழுரை: நீண்ட பாடம்

விண்ணகத் தூதர் அணி மகிழ்வதாக;
இப்புனித நிகழ்வில் பெருமகிழ்ச்சி பொங்குவதாக;
மாபெரும் மன்னரது வெற்றிக்காக
எக்காளம் தொனித்து மீட்பை அறிவிப்பதாக.
இப்பெரும் சுடர்களால் ஒளிவீசப்பெற்று
இவ்வுலகம் பெருமகிழ்ச்சி கொள்வதாக:
முடிவில்லா மன்னரது பேரொளியால்
உலகெல்லாம் துலங்கி, தன்னைச் சூழ்ந்த
இருள் அனைத்தும் ஒழிந்ததென உணர்வதாக.
இப்பெரும் சுடர்களால் அழகுபெற்று
அன்னையாம் திரு அவையும் களிகூர்வதாக.
எனவே மக்கள் அனைவரின் பேரொலியால்
இக்கோவில் எதிரொலித்து முழங்குவதாக.
(எனவே, இத்திருவிளக்கின் வியத்தகு ஒளியைச்
சூழ்ந்து நிற்கும் அன்புமிக்க சகோதர சகோதரிகளே,
உங்களை வேண்டுகின்றேன்: என்னுடன் சேர்ந்து,
எல்லாம் வல்ல இறைவனின் இரக்கத்தை இறைஞ்சுவீர்களாக.
தகுதியற்ற அடியேனைத் திருப்பணியாளருள் சேர்த்திட

அருள்கூர்ந்த இறைவன்தாமே திருவிளக்கின் பேரொளியை என்மீது வீசி இத்திரியின் புகழ்சாற்றச் செய்வாராக).

(மு. மொ. : ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.
பதில் : உம் ஆன்மாவோடும் இருப்பாராக.)
மு. மொ. : இதயங்களை மேலே எழுப்புங்கள்.
பதில் : ஆண்டவரிடம் எழுப்பியுள்ளோம்.
மு. மொ. : நம் இறைவனாகிய ஆண்டவருக்கு நன்றி கூறுவோம்.
பதில் : அது தகுதியும் நீதியும் ஆனதே).

கண்ணுக்குப் புலப்படாத இறைவனாகிய எல்லாம் வல்ல தந்தையையும் அவருடைய ஒரே மகனாகிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவையும் இதயப் பற்றுதலோடும் முழு மனதோடும் வாயாரப் பாடிப் புகழ்வது மெய்யாகவே தகுதியும் நீதியும் ஆகும்.

ஆதாமினால் வந்த கடனைக்
கிறிஸ்துவே என்றுமுள்ள தந்தைக்கு நமது பெயரால் செலுத்தி,
பாவத்துக்கு உரிய கடன்சீட்டைத்
தாம் சிந்திய திரு இரத்தத்தால் அழித்துவிட்டார்.

ஏனெனில் பாஸ்கா விழா இதுவே:
இதில் மெய்யான செம்மறியாகிய கிறிஸ்து கொலையுண்டார்;
அவரது இரத்தத்தால்
நம்பிக்கையாளரின் கதவுநிலைகள் அர்ச்சிக்கப்படுகின்றன.

முற்காலத்தில் எம் முன்னோரான இஸ்ரயேல் மக்களை
நீர் எகிப்திலிருந்து விடுவித்து அவர்கள் கால் நனையாமல்
செங்கடலைக் கடக்கச் செய்தது இந்த இரவிலேதான்.

நெருப்புத் தூணின் வெளிச்சத்தால்
பாவத்தின் இருளை அகற்றிய இரவு இதுவே.

பூவுலகெங்கும் இன்று கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டவர்களை
உலகின் தீய வழியிலிருந்தும் பாவ இருளிலிருந்தும் பிரித்து,
அருள்வாழ்வில் மீண்டும் சேர்த்துத் தூயவராக்கியதும்
இந்த இரவேதான்.

சாவின் தளைகளைத் தகர்த்தெறிந்து,
கிறிஸ்து பாதாளத்திலிருந்து வெற்றி வீரராய் எழுந்ததும்
இந்த இரவிலேதான்.

ஏனெனில் இத்தகைய மீட்பின் பயனை யாம் பெறாவிடில்,
பிறந்ததால் எப்பயனும் இல்லையே.

நீர் எம்மீது அருள்கூர்ந்து காட்டிய பரிவிரக்கம்
எத்துணை வியப்புக்கு உரியது!
அடிமையை மீட்குமாறு மகனையே கையளித்த
அளவில்லா அன்புப் பெருக்கே!

ஓ ஆதாமின் பாவமே! உன்னை அழிக்கக்
கிறிஸ்துவின் சாவு திண்ணமாய்த் தேவைப்பட்டது!

இத்துணை மாண்புமிக்க மீட்பரை அடைந்ததால்
பேறுபெற்ற குற்றமே!

ஓ மெய்யாகவே பேறுபெற்ற இரவே!
பாதாளத்திலிருந்து கிறிஸ்து உயிர்த்தெழுந்த
காலமும் நேரமும் அறிய நீ மட்டுமே பேறுபெற்றாய்!

இரவு பகல் போல் ஒளிபெறும்; நாள் மகிழ்வுற இரவும் ஒளிதரும்
என எழுதியுள்ளது இந்த இரவைக் குறித்தே.

ஆகவே புனிதப்படுத்தும் இவ்விரவின் திருநிகழ்ச்சி
தீமையை ஒழிக்கின்றது, குற்றங்களைக் கழுவிப் போக்குகின்றது;

தவறினோருக்கு மாசின்மையையும்
துயருற்றோருக்கு மகிழ்ச்சியையும் அளிக்கின்றது;
பகைமையை விரட்டுகின்றது, ஆணவத்தை அடக்குகின்றது;
மன ஒற்றுமையை உருவாக்குகின்றது.

ஆகவே தூய தந்தையே, அருள்பொழியும் இவ்விரவில்
நாங்கள் உமது புகழ்ச்சிக்காக அளிக்கும் மாலைப் பலியை ஏற்றருளும்;
தேனீக்களின் உழைப்பாலான மெழுகிலிருந்து உருவான இத்திரியைப்
புனிதத் திரு அவை தன் பணியாளரின் கையால்
மிகச் சிறப்புடன் உமக்கு ஒப்புக்கொடுத்து மாலைப் பலி செலுத்துகின்றது.

இறைவனின் மாட்சிக்காகச் செந்தழலாய்ச் சுடர்விட்டெரியும்
இந்த நெருப்புத் தூணின் பெருமையை அறிந்திருக்கின்றோம்:
இத்தீயிலிருந்து பல விளக்குகளை ஏற்ற,
தன் ஒளியிலிருந்து பங்கு கொடுத்தாலும், அது குறைவுபடுவதில்லை;
ஏனெனில் தாய்த் தேனீ தந்த மெழுகு உருகுவதால்
உயர்மதிப்புள்ள தீ வளர்க்கப்படுகின்றது.

விண்ணுக்கு உரியவை மண்ணுக்கு உரியவையோடும்
கடவுளுக்கு உரியவை மனிதருக்கு உரியவையோடும் இணைந்தது
மெய்யாகவே பேறுபெற்ற இந்த இரவிலேதான்!

எனவே ஆண்டவரே, உம்மை வேண்டுகின்றோம்:
உமது பெயரின் மாட்சிக்காக நேர்ந்தளிக்கப்பட்ட இந்த மெழுகுதிரி,
இவ்விரவின் இருளை ஒழிக்குமாறு,
குறைவுபடாமல் நின்று எரிவதாக.

இது இனிமைதரும் நறுமணமாக ஏற்கப்பட்டு,
விண்ணக விளக்குகளுடன் கலந்துகொள்வதாக.
விடிவெள்ளி எழும்போதும் இது சுடர்விட்டு எரிவதாக.
ஒருபோதும் மறையாத இந்த விடிவெள்ளி

உம் திருமகன் கிறிஸ்துவேதான்;
பாதாளத்திலிருந்து திரும்பி வந்து,
மனித இனத்தின்மீது அமைதியுடன் ஒளி வீசி,
என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்றவர் அவரே.

பதில் : ஆமென்.

## வார்த்தை வழிபாடு

தலைவர் : அன்புமிக்க சகோதர சகோதரிகளே, இத்திருவிழிப்பைச் சிறப்புடன் தொடங்கியுள்ள நாம், அமைதியான இதயத்தோடு இப்போது இறைவார்த்தையைக் கேட்போமாக: கடந்த காலங்களில் கடவுள் தம் மக்களை எவ்வாறு மீட்டார் என்றும், இறுதியாகத் தம் திருமகனை நமக்கு மீட்பராக அனுப்பினார் என்றும் சிந்திப்போமாக. மேலும் விடுதலை அளிக்கும் இந்தப் பாஸ்கா நிகழ்வினால் மீட்பின் நிறைவுக்கு நம் இறைவன் நம்மை இட்டுச்செல்வாராக.

## இரண்டாம் பகுதி : இறைவார்த்தை வழிபாடு

*மெழுகுதிரிகளை அணைத்துவிட்டு அமர்வோம். பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேல் மக்கள் இரவு நேரங்களில் கண்விழித்து, கடவுள் தங்களுக்குச் செய்த மாபெரும் செயல்களை விவிலியத்தில் வாசித்து, திருப்பாடல்களைப் பாடி செபித்தார்கள். புதிய இஸ்ரயேலாகிய நாமும், இறைவன் இயேசு வழியாக செய்த மீட்புச் செயல்களை வாசித்து தியானிப்போம். ஒவ்வொரு வாசகத்திற்கு பிறகும் அதனுடன் தொடர்புடைய திருப்பாடல்களைப் பாடுவோம். (பிறகு அனைவரும் எழுந்து நிற்க, அருள்பணியாளர் அவ்வாசகத்தின் பின்னணியில் செபிப்பார்).*

## முதல் வாசகம் : தொநூ 1:1 - 2:2

*ஒன்றுமில்லாமையிலிருந்து உலகைப் படைத்த இறைவன். படைப்பின் சிகரமாக மனிதனைப் படைக்கிறார். இவ்வாறு தனது படைப்புச் செயல் வழியாக மனிதரோடும், உலகோடும் அன்புறவு கொள்ளும் ஆற்றல்மிகு இறைவனை இந்த வாசகத்தின் வழியாக சென்று சந்திப்போம்.*

### முதல் வாசகத்துக்குப்பின் பதிலுரைத் திருப்பாடல்

### திருப்பாடல் - 105 (104)

**பல்லவி**

உமது ஆவியை அனுப்பியருளும் ஆண்டவரே! மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிக்கின்றீர் –.

என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு! என் கடவுளாகிய ஆண்டவரே! நீர் எத்துணை மேன்மைமிக்கவர்! நீர் மாண்பையும் மாட்சியையும் அணிந்துள்ளவர். பேரொளியை ஆடையென அணிந்துள்ளவர்.

5 நீவிர் பூவுலகை அதன் அடித்தளத்தின்மீது நிலைநாட்டினீர்; அது என்றென்றும் அசைவுறாது.

6 அதனை ஆழ்கடல் ஆடையென மூடியிருந்தது; மலைகளுக்கும் மேலாக நீர்த்திரள் நின்றது. **பல்லவி**

10 பள்ளத்தாக்குகளில் நீரூற்றுகள் சுரக்கச் செய்கின்றீர்; அவை மலைகளிடையே பாய்ந்தோடும்.

12 நீரூற்றுகளின் அருகில் வானத்துப் பறவைகள் கூடுகட்டிக் கொள்கின்றன; அவை மரக்கிளைகளினின்று இன்னிசை இசைக்கின்றன. **பல்லவி**

13 உம் மேலறைகளினின்று மலைகளுக்கு நீர் பாய்ச்சுகின்றீர்; உம் செயல்களின் பணியால் பூவுலகம் நிறைவடைகின்றது.

14 கால்நடைகளுக்கெனப் புல்லை முளைக்கச் செய்கின்றீர்; மானிடருக்கெனப் பயிர்வகைகளை வளரச் செய்கின்றீர். **பல்லவி**

24 ஆண்டவரே! உம் வேலைப்பாடுகள் எத்தனை எத்தனை! நீர் அனைத்தையும் ஞானத்தோடு செய்துள்ளீர்! பூவுலகம் உம் படைப்புகளால் நிறைந்துள்ளது.

35c என் உயிரே! நீ ஆண்டவரைப் போற்றிடு! **பல்லவி**

### இரண்டாம் வாசகம் : தொநூ 22:1-18

### 2-ஆம் வாசகத்துக்குப்பின் பதிலுரைத் திருப்பாடல்

### திருப்பாடல் - 17 (16)

**பல்லவி**

இறைவா, என்னைக் காத்தருளும்; உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்.

ஆண்டவர் தாமே என் உரிமைச் சொத்து; அவரே என் கிண்ணம்; எனக்குரிய பங்கைக் காப்பவரும் அவரே; ஆண்டவரை எப்போதும் என் கண்முன் வைத்துள்ளேன்; அவர் என் வலப்பக்கம் உள்ளார்; எனவே, நான் அசைவுறேன்.

5 ஆண்டவர்தாமே என் உரிமைச் சொத்து; அவரே என் கிண்ணம்; எனக்குரிய பங்கைக் காப்பவரும் அவரே;

8 ஆண்டவரை எப்போதும் என் கண்முன் வைத்துள்ளேன்; அவர் என் வலப்பக்கம் உள்ளார்; எனவே, நான் அசைவுறேன். **பல்லவி**

9 என் இதயம் அக்களிக்கின்றது; என் உள்ளம் மகிழ்ந்து துள்ளுகின்றது; என் உடலும் பாதுகாப்பில் நிலைத்திருக்கும்.

10 ஏனெனில், என்னைப் பாதாளத்திடம் ஒப்புவிக்கமாட்டீர்; உம் அன்பனைப் படுகுழியைக் காணவிடமாட்டீர். **பல்லவி**

11 வாழ்வின் வழியை நான் அறியச் செய்வீர்; உமது முன்னிலையில் எனக்கு நிறைவான மகிழ்ச்சி உண்டு; உமது வலப்பக்கத்தில் எப்போதும் பேரின்பம் உண்டு. **பல்லவி**

### மூன்றாம் வாசகம் : விப 14:15 - 15:1

*எகிப்தியரின் அடிமைத்தனத்தினின்று இஸ்ரயேல் மக்களை அற்புதமாக அவர்களுடைய பாதங்கள் நனையாமல் மோசே தலைமையில் அழைத்து வந்ததையும், பார்வோனின் படைகளை நடுக்கடலில் அமிழ்த்திய வரலாற்று நிகழ்ச்சியையும் விவரிக்கின்றது இவ்வாசகம். கவனமுடன் கேட்போம்.*

## 3-ஆம் வாசகத்துக்குப்பின் பதிலுரைத் திருப்பாடல்

**பல்லவி**

ஆண்டவர்க்கு நான் புகழ்பாடுவேன்; ஏனெனில் மாட்சியுடன் வெற்றிப் பெற்றார்.

குதிரை வீரனைக் குதிரையுடன் அவரே
கடலுக்குள் அவிழ்த்தி விட்டார். எனக்கு மீட்பராய்
அவரே என் ஆற்றலும் பாலும் ஆயினரே.

கடவுள் எனக்கு இவர் தானே
அவரை நான் புகழ்ந்தேத்துவேன். என் மூதாதையரின்
கடவுளிவர் அவரைநான் ஏத்திப் போற்றிடுவேன்.

போர்களில் வல்லவர் ஆண்டவரே
ஆண்டவர் என்பது அவர் பெயராம்

**நான்காம் வாசகம் : எசாயா 54:5-14**

## 4-ஆம் வாசகத்துக்குப்பின் பதிலுரைத் திருப்பாடல்
## திருப்பாடல் - 30 (29)

**பல்லவி**

ஆண்டவரே, நீர் என்னைக் கை தூக்கி விட்டீர். ஆகவே உம்மைப் புகழ்வேன்.

ஆண்டவரே, உம்மை ஏத்திப் புகழ்வேன்; ஏனெனில், நீர் என்னைக் கைதூக்கிவிட்டீர்; என்னைக் கண்டு என் பகைவர் மகிழ நீர் விடவில்லை. ஆண்டவரே, நீர் என்னைப் பாதாளத்திலிருந்து ஏறிவரச் செய்தீர்; சாவுக்குழியில் இறங்கிய எனது உயிரைக் காத்தீர்.

4 இறையன்பரே, ஆண்டவரைப் புகழ்ந்து பாடுங்கள்; தூயவராம் அவரை நினைந்து நன்றி கூறுங்கள்.

5 அவரது சினம் ஒரு நொடிப் பொழுதுதான் இருக்கும்; அவரது கருணையோ வாழ்நாள் முழுதும் நீடிக்கும்; மாலையில் அழுகை; காலையிலோ ஆர்ப்பரிப்பு. **பல்லவி**

10 ஆண்டவரே, எனக்குச் செவிசாயும்; என்மீது இரங்கும்; ஆண்டவரே, எனக்குத் துணையாய் இரும்.

11a நீர் என் புலம்பலைக் களிநடனமாக மாற்றிவிட்டீர்;

12b என் கடவுளாகிய ஆண்டவரே, உமக்கு என்றென்றும் நன்றி செலுத்துவேன். **பல்லவி**

**ஐந்தாம் வாசகம் : எசாயா 55:1-11**

## 5-ஆம் வாசகத்துக்குப்பின் பதிலுரைத் திருப்பாடல்
## (எசா - 12)

**பல்லவி**

மீட்பருளும் ஊற்றுகளிலிருந்து அக மகிழ்வோடு தண்ணீரை முகந்து கொள்வீர்கள்.

இறைவன் என் மீட்பர், அவர்மேல் நம்பிக்கை வைக்கிறேன், நான் அஞ்சமாட்டேன்; ஆண்டவரே என் ஆற்றல், அவரையே பாடுவேன், என் மீட்பும் அவரே. மீட்பருளும் ஊற்றுகளிலிருந்து நீங்கள் அகமகிழ்வோடு தண்ணீர் முகந்து கொள்வீர்கள்.

2 இறைவன் என் மீட்பர், அவர்மேல் நம்பிக்கை வைக்கிறேன், நான் அஞ்சமாட்டேன்; ஆண்டவரே என் ஆற்றல், அவரையே பாடுவேன், என் மீட்பும் அவரே.

3 நீங்கள் அகமகிழ்வோடு தண்ணீர் முகந்துகொள்வீர்கள். பல்லவி

4bcd ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்; அவர் திருப்பெயரைப் போற்றுங்கள்; மக்களினங்களிடையே அவர் செயல்களை அறிவியுங்கள்; அவர் திருப்பெயர் உயர்க எனப் பறைசாற்றுங்கள்.

**பல்லவி**

5 ஆண்டவருக்குப் புகழ்ப்பா அமைத்துப் பாடுங்கள்; ஏனெனில் அவர் மாட்சியுறும் செயல்களைப் புரிந்துள்ளார்; அனைத்துலகும் இதை அறிந்துகொள்வதாக.

6 சீயோனில் குடியிருப்போரே! ஆர்ப்பரித்து அக்களியுங்கள்; இஸ்ரயேலின் தூயவர் உங்களிடையே சிறந்து விளங்குகின்றார்.

**பல்லவி**

## ஆறாம் வாசகம் : பாரூக்கு 3:9-15, 32:4,4

### 6-ஆம் வாசகத்துக்குப்பின் பதிலுரைத் திருப்பாடல்

### திருப்பாடல் - 19 (18)

**பல்லவி**

ஆண்டவரே! நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம் உள்ளன.

7. ஆண்டவரின் திருச்சட்டம் நிறைவானது; அது புத்துயிர் அளிக்கின்றது. ஆண்டவரின் ஒழுங்குமுறை நம்பத்தக்கது; எளியவருக்கு அது ஞானம் அளிக்கின்றது.

8 ஆண்டவரின் நியமங்கள் சரியானவை; அவை இதயத்தை மகிழ்விக்கின்றன. ஆண்டவரின் கட்டளைகள் ஒளிமயமானவை; அவை கண்களை ஒளிர்விக்கின்றன. **பல்லவி**

9 ஆண்டவரைப் பற்றிய அச்சம் தூயது; அது எந்நாளும் நிலைத்திருக்கும். ஆண்டவரின் நீதிநெறிகள் உண்மையானவை; அவை முற்றிலும் நீதியானவை. **பல்லவி**

10 அவை பொன்னினும், பசும் பொன்னினும் மேலாக விலைமிக்கவை; தேனினும், தேனைடையினின்று சிந்தும் தெளி தேனினும் இனிமையானவை. **பல்லவி**

## ஏழாம் வாசகம் : எசேக்கியேல் 36:16-28

*சென்ற இடமெல்லாம் கடவுளின் திருப்பெயரைத் தீட்டுப்படுத்திய இஸ்ரயேல் மக்களை, அவரே தூய நீரைத் தெளித்து தூய்மைப் படுத்துவதையும் புதிய இதயத்தையும் புதிய ஆவியையும் அருள்வேன் என்றும், கல்லான இதயத்தை எடுத்துவிட்டு கனிவுள்ள இதயத்தைப் பொருத்துவேன் எனும், கடவுளது செயலினை விளக்குகிறது இவ்வாசகம். கவனமுடன் கேட்போம்.*

## 7-ஆம் வாசகத்துக்குப்பின் பதிலுரைத் திருப்பாடல்
## திருப்பாடல் - 42 (41)

**பல்லவி**

கலைமான் நீரோடைகளை ஆர்வமுடன் நாடிச் செல்வது போல் கடவுளே என்நெஞ்சம் உம்மை ஆர்வமுடன் நாடிச் செல்கின்றது.

என் நெஞ்சம் கடவுள்மீது, உயிருள்ள இறைவன்மீது தாகம் கொண்டுள்ளது; எப்பொழுது நான் கடவுள் முன்னிலையில் வந்து நிற்கப் போகின்றேன்?

4abc மக்கள் கூட்டத்தோடு சேர்ந்து பவனியாகக் கடவுளின் இல்லத்திற்குச் சென்றேனே! ஆர்ப்பரிப்பும் நன்றிப் பாடல்களும் முழங்க விழாக்கூட்டத்தில் நடந்தேனே!

**பல்லவி**

43:3 உம் ஒளியையும் உண்மையையும் அனுப்பியருளும்; அவை என்னை வழிநடத்தி, உமது திருமலைக்கும் உமது உறைவிடத்திற்கும் கொண்டுபோய்ச் சேர்க்கும். **பல்லவி**

4 அப்பொழுது, நான் கடவுளின் பீடம் செல்வேன்; என் மன மகிழ்ச்சியாகிய இறைவனிடம் செல்வேன்; கடவுளே! என் கடவுளே! யாழிசைத்து ஆர்ப்பரித்து உம்மைப் புகழ்ந்திடுவேன். **பல்லவி**

## உன்னதங்களிலே

*இதோ ஆண்டவரின் உயிர்ப்பின் நேரம். நாற்பதுநாள் பாடாத "உன்னதங்களிலே" என்னும் பாடலை இப்போது அனைவரும் சேர்ந்து பாடுவோம். அக்களித்து இயேசுவின் உயிர்ப்பில் அகமகிழ்ந்து பாடுவோம்.*

## திருமுகம் : உரோமையர் 6:3-11

## திருமுக வாசகத்துக்குப்பின் பதிலுரைத் திருப்பாடல்

## திருப்பாடல் - 117

## பல்லவி

அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா

(1,2) ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள், ஏனெனில் அவர் நல்லவர்: என்றென்றும் உள்ளது அவரது இரக்கம். "என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்" என்று இஸ்ரயேல் இனத்தவர் சாற்றுவார்களாக.

(16–17) ஆண்டவரது வலக்கரம் என்னை நிலைநிறுத்தியது; ஆண்டவரது வலக்கரம் வலிமையாய்ச் செயலாற்றியது. இறந்தொழியேன், உயிர்வாழ்வேன்: ஆண்டவருடைய அருஞ்செயல்களைப் பறைசாற்றுவேன்.

(22–23) வீடு கட்டுவோர் புறக்கணித்த கல்லே வீட்டுக்கு மூலைக்கல் ஆயிற்று: ஆண்டவர் செயலிது; நம் கண்களுக்கு வியப்பாய் உள்ளது.

## நற்செய்தி வாசகம் : மத்தேயு 28:1-10

## திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பித்தல்

*எல்லாரும் எழுந்து, மெழுகுதிரிகளை ஏற்றிக்கொள்வோம். நம்முடைய பாவச் செயல்களின் மூலம் திருமுழுக்கின் அருளை இழந்து வாழும் நாம், மீண்டும் திருமுழுக்கின் வாக்குறுதிகளைப் புதுப்பித்து இறை உறவில் வாழ உறுதி எடுப்போம்.*

எல் : ஒரே கடவுளை நம்புகின்றேன். . .

விண்ணகமும் மண்ணகமும், காண்பவை காணாதவை யாவும் படைத்த
எல்லாம் வல்ல தந்தை அவரே.
கடவுளின் ஒரே மகனாய் உதித்த ஒரே ஆண்டவர்
இயேசு கிறிஸ்துவை நம்புகின்றேன்.
இவர் காலங்களுக்கெல்லாம் முன்பே தந்தையிடமிருந்து பிறந்தார்.
கடவுளினின்று கடவுளாக, ஒளியினின்று ஒளியாக,
உண்மைக் கடவுளினின்று உண்மைக் கடவுளாக உதித்தவர்.
இவர் உதித்தவர், உண்டாக்கப்பட்டவர் அல்லர்.
தந்தையோடு ஒரே பொருளானவர்.
இவர் வழியாகவே யாவும் படைக்கப்பட்டன.
மனிதர் நமக்காகவும் நம் மீட்புக்காகவும்
விண்ணகம் இருந்து இறங்கினார்.

(". . . மனிதர் ஆனார்" எனச் சொல்லும்வரை எல்லாரும் தலை வணங்கவும்).

தூய ஆவியால் கன்னி மரியாவிடம்
உடல் எடுத்து மனிதர் ஆனார்.
மேலும் நமக்காகப் பொந்தியு பிலாத்தின் அதிகாரத்தில்
சிலுவையில் அறையப்பட்டுப்
பாடுபட்டு, இறந்து, அடக்கம் செய்யப்பட்டார்.
மறைநூல்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.
விண்ணகத்துக்கு எழுந்தருளி,
எல்லாம் வல்ல தந்தையின் வலப் பக்கம் வீற்றிருக்கின்றார்.
வாழ்வோரையும் இறந்தோரையும் தீர்ப்பிட
மாட்சியுடன் மீண்டும் வர இருக்கின்றார்.
அவரது ஆட்சிக்கு முடிவு இராது.
தந்தையிடமிருந்தும் மகனிடமிருந்தும் புறப்படும்
ஆண்டவரும் உயிர் அளிப்பவருமான தூய ஆவியாரை நம்புகின்றேன்.
இவர் தந்தையோடும் மகனோடும் ஒன்றாக
ஆராதனையும் மாட்சியும் பெறுகின்றார்.
இறைவாக்கினர்கள் வாயிலாகப் பேசியவர் இவரே.
ஒரே, புனித, கத்தோலிக்க, திருத்தூதர் வழிவரும்

திரு அவையை நம்புகின்றேன்.
பாவ மன்னிப்புக்கான ஒரே திருமுழுக்கை ஏற்றுக்கொள்கின்றேன்.
இறந்தோரின் உயிர்ப்பையும்
வரவிருக்கும் மறு உலக வாழ்வையும் எதிர்பார்க்கின்றேன். ஆமென்.

## பொது மன்றாட்டு

### 1. அன்புத் தந்தையே இறைவா,

அன்பால் உலகை இயேசு வென்றதுபோல அன்பால் இறையாட்சியை அமைக்க பயணம் செய்யும் உமது திரு அவைக்கு உமது அருளாசியைத் தாரும். அதனை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், அருள்பணியாளர்கள், துறவியர் யாவருக்கும் ஆவியின் கனிகளைப் பொழிந்து, கொரோனா தொற்றுநோயின் கொடூர தாக்குதலில் இருந்து காப்பாற்ற வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

### 2. அமைதியின் ஊற்றே இறைவா,

நீர் உருவாக்கிய இந்த பூமியில் நாளும் காணும் வன்முறை, போர், கலவரம், தீண்டாமை, கல்லாமை, இல்லாமை அகன்று, மக்கள் அனைவரும் அமைதியின் தூதுவர்களாய் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

### 3. சமத்துவத்தின் சங்கமமே இறைவா,

உலகில் வாழும் மாந்தர் யாவரும், செய்யும் தொழிலால், பேசும் மொழியால், சேர்ந்துள்ள செல்வத்தால், பிறப்பால், வளர்ப்பால், உயர்வு தாழ்வு பார்க்கும் நிலையில் உள்ளனர். எங்கள் மனங்களில் மண்டியுள்ள ஏற்றத்தாழ்வு அழுக்குகள் அகன்று, அனைவரும் சமம் என்ற உணர்வுடன் சமத்துவத்திற்காக உழைக்க அருள்வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

### 4. உறவுகளுக்கெல்லாம் ஊற்றாகிய இறைவா,

விரோதத்தால் விலகி நிற்கும் மக்களைக் கடைக்கண் பாரும். இவர்களின் நெஞ்சங்களில் நிறைந்துள்ள பகைமை, பொறாமை, விட்டுக்கொடுத்து வாழும் மனமில்லாமை போன்ற எண்ணங்கள் மாறி, பாஸ்கா மகிழ்வினில் உறவுகளை ஊக்கப்படுத்தி வாழ அருள்வேண்டி, இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 5. காக்கும் தெய்வமே இறைவா,

கொரோனா தொற்று நோயின் கோரப்பிடியில் சிக்கித்தவிக்கும் அப்பாவி பிள்ளைகளுக்காகச் செபிக்கிறோம். அவர்கள் அனைவரும் உமது அருளால், ஆசீரால் காப்பாற்றப்பட்டு மீண்டும் நீர் காட்டிய உயிர்ப்பின் மகிழ்ச்சியில் பங்குகொள்ள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

தலைவர் : நம்முடைய தனிப்பட்ட தேவைகளுக்காக அமைதியாக வேண்டுவோம் (அமைதி)

தலைவர் : மன்றாடுவோமாக : இரக்கம் நிறைந்த இறைவா, உம்முடைய பிள்ளைகளாகிய நாங்கள் உம்மீது மிகுந்த நம்பிக்கை கொண்டு எழுப்பியுள்ள இந்த வேண்டுதல்களுக்கு கனிவுடன் செவிசாய்த்தருளும். எங்களை எந்நாளும் காத்து வழிநடத்தி வருகின்ற எம் தந்தையே, உமது வள்ளன்மையால் நாங்கள் உம் அருள்வரங்களை நிறைவாகப் பெற்று மகிழ்வோமாக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

தலைவர் : இறைவன் நம்மைத் தொடர்ந்து அன்பு செய்து வருகிறார். நமது அன்பை அவருக்குக் காட்டும் அடையாளமாக, நமது உழைப்பின் பயனாகக் கிடைத்த பொருள்களைப் பவனியாகக் கொண்டு வந்து காணிக்கையாக்குவோம்.

பாடல் : (பொருத்தமான காணிக்கைப் பாடல் பாடலாம்).

## போற்றிப் புகழ்தல்

தலைவர் : அனைத்தையும் படைத்துப் பராமரித்துப் பாதுகாத்து வரும் தந்தையே உம்மைப் போற்றுகிறோம்.

எல் : இறைவா உம்மைப் போற்றுகிறோம். உம்மைப் புகழ்கிறோம்; உமக்கு நன்றி கூறுகிறோம்.

தலைவர் : கன்னி மரியாவிடமிருந்து பிறந்து எங்கள் பாவங்களுக்காகச் சிலுவையில் இறந்து உயிர்த்த இயேசுவே உம்மைப் போற்றுகிறோம்.

எல் : இறைவா உம்மைப் போற்றுகிறோம். . . . .

தலைவர் : எம் நடுவில் எழுந்தருளி, எங்களைப் புனிதப்படுத்தி வழிநடத்துகின்ற தூய ஆவியாரே, உம்மைப் போற்றுகிறோம்.

எல் : இறைவா உம்மைப் போற்றுகிறோம். . . . .

தலைவர் : எங்கள் துன்ப வேளையிலே எங்களோடு இருந்து, துயர் துடைத்து ஆறுதல் அளிக்கின்ற ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறோம்.

எல் : இறைவா உம்மைப் போற்றுகிறோம். . . . .

தலைவர் : நாங்கள் நோயுறும்போது நலம்தரும் நாயகனாக வந்து எங்களைச் சந்தித்து, குணமாக்குகின்ற ஆண்டவரே உம்மைப் போற்றுகிறோம்.

எல் : இறைவா உம்மைப் போற்றுகிறோம். . . . .

தலைவர் : என்றும் எங்களோடு தங்கி, எங்களைப் பலப்படுத்தி, உமது வல்லமையாலும் ஆற்றலாலும் நிரப்பிக் காத்து வருகின்ற ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறோம்.

எல் : இறைவா உம்மைப் போற்றுகிறோம். . . . .

தலைவர் : மூவொரு இறைவா, விண்ணகமும் மண்ணகமும் உம்மைப் பணிந்து வணங்கி உமது வல்ல செயல்களைப் புகழ்கின்றன; நாங்களும் வான்படைகளின் அணிகள் அனைத்தோடும் சேர்ந்து முடிவின்றிப் பறைசாற்றிச் சொல்வதாவது:

எல் : தூயவர், தூயவர். . . . .

## பலியின் நினைவு

தலைவர் : நம்முடைய மீட்புக்காகத் தம்மையே கல்வாரியில் பலியாக்கினார் கிறிஸ்து. அப்பலியை நாம் இப்போது நினைவுகூர்வோம். அருளடையாள முறையில் தொடர்ந்து நமக்காகப் பலியாகும் கிறிஸ்துவோடு, நம்மையும், நம் சிந்தனை, சொல், செயல் அனைத்தையும் இணைத்துக் கொள்வோம்.

எல் : எங்களுக்காகப் பலியாகும் அன்பு இயேசுவே / உம்மை ஆராதித்துப் போற்றிப் புகழ்கின்றோம். / அன்று கல்வாரியில் பலியான நீர், / இன்று திருப்பலிக் கொண்டாட்டங்களில், / எங்களுக்காக மீண்டும் மீண்டும் பலியாகின்றீர். / வாழ்வளிக்கும் உணவாக உம்மையே எங்களுக்கு அளிக்கின்றீர். / இன்று உம் பலியை / நாங்கள் அருளடையாள முறையில் கொண்டாட இயலாவிடினும் / உமது கல்வாரிப் பலியை நினைவுகூர்கின்றோம்; / அந்தப் பலியோடு எங்களையே இணைத்துக் கொள்கிறோம். எங்கள் இன்பம், துன்பம், / ஏற்றம், ஏமாற்றம், / சிக்கல்கள், பிரச்சினைகள், /

வேலைகள், திட்டங்கள் அனைத்தையும், / எங்கள் வாழ்வு முழுவதையும் / உமக்கு உகந்த பலியாக அர்ப்பணிக்கின்றோம். / எங்கள் எளிய காணிக்கையை ஏற்றுக்கொண்டு / எங்களை ஆசீர்வதியும். / எம் சிந்தனை, சொல், செயல் அனைத்தையும் / நீர் புனிதப்படுத்தியருளும். / நாங்கள் எங்களையே மறுத்து, / தியாக உணர்வோடு உம்மைப் பின்பற்றச் செய்வீராக. / எம் சகோதர சகோதரிகளில் உம்மைக் காணவும், அவர்களை முழு உள்ளத்தோடு ஏற்று அன்பு செய்யவும் / தாராள உள்ளத்தோடு அனைவர்க்கும் பணிபுரியவும் / வரமருள்வீராக. / ஆமென்.

## திருவுணவின் நினைவு

தலைவர் : கடவுளை நம் தந்தையென அழைக்க இயேசு நமக்குக் கற்பித்தார். எனவே, நம் தந்தையாகிய இறைவனைப் போற்றவும், இறையாட்சி இவ்வுலகில் வளரவும் இயேசு கற்றுத்தந்த மன்றாட்டைச் சொல்வோம்.

எல் : விண்ணுலகில் இருக்கிற. . . . . (பாடலாம்)

தலைவர் : இவ்வழிபாட்டில் பங்கு கொள்ளும் நாம் அனைவரும், அன்பிலும் நட்புறவிலும் ஒவ்வொரு நாளும் வளரவேண்டுமென்று இயேசு நம்மை அழைக்கிறார். அவரே நம்மிடையே காணப்படும் பிளவுகளை அகற்றி, நம்மை அன்பின் குடும்பமாக உருவாக்குகிறார். எனவே, நாம் அன்புறவில் நிலைத்து வாழ்வோம் என்பதன் அடையாளமாக, ஒருவருக்கொருவர் அமைதியை அறிவித்துக்கொள்வோம்.

## அமைதியை அறிவித்தல்

எல் : உலகின் பாவங்களைப் போக்கும். . .

தலைவர் : இப்போது, ஆண்டவர் இயேசு நம் உள்ளத்தில் எழுந்தருளிவர, அனைவரும் சேர்ந்து மன்றாடுவோம்.

எல் : "ஆண்டவரே, / நீர் என் இல்லத்தில் எழுந்தருள / நான் தகுதியற்றவன். / ஆனால் ஒரு வார்த்தை மட்டும் சொல்லியருளும்" / என்று நூற்றுவர் தலைவர் செபித்ததுபோல, / நாங்களும் இப்போது / உம் திருப்பாதம் பணிந்து வேண்டுகிறோம். / இனிய இயேசுவே! / நாங்கள் தகுதியற்றவர்களாய் இருந்தாலும், / எங்கள் தகுதியின்மையைப் பாராமல் / நீர் எங்கள் உள்ளங்களில் எழுந்து வாரும். / உம் அன்பிலும் அருளிலும் நாங்கள் நிலைத்திருக்க / எம்முள் எழுந்துவாரும். / உம் பிள்ளைகளாக, / உயிருள்ள உண்மைச் சாட்சிகளாக, / உமது நற்செய்தியின்படி வாழ்பவர்களாக /

எங்களை உருமாற்ற வாரும். / தந்தையின் திருவுளப்படி வாழ்ந்திட / எங்களுக்குத் துணைபுரிந்திட வாரும். / நன்மை செய்வதில் ஆர்வமுள்ள வர்களாய், / தீமைகள் அனைத்திலிருந்தும் விடுதலை பெற்றவர்களாய் வாழவும் / எங்களை வழிநடத்த வாரும். / எல்லா நலன்களாலும் வளங்களாலும் எங்களை நிரப்ப வாரும் / – ஆமென்.

## சிறிது நேரம் அனைவரும் அமைதியாக மன்றாடுதல்

பாடல் : பொருத்தமான பாடல் பாடலாம்.

## இறுதி மன்றாட்டு

தலைவர் : மன்றாடுவோமாக : அன்பின் ஊற்றாகிய இறைவா! இந்த வழிபாட்டின் வழியாக நீர் எங்களைச் சந்தித்தீர். உமது திருவார்த்தையால் எங்களுக்கு வாழ்வளித்தீர். ஆண்டவரே, உமது அன்பின் ஆவியை எங்கள்மீது பொழிந்தருளும்; இவ்வாறு பாஸ்கா அருளடையாளங்களால் நிறைவு பெற்ற நாங்கள் உமது பரிவிரக்கத்தால் ஒருமனப்பட்டிருக்கச் செய்வீராக. எங்கள்.

எல் : ஆமென்.

## கொரோனா வைரஸ் தொற்று நோய் நெருக்கடியில் அன்னை மரியாவை நோக்கி மன்றாட்டு

தலைவர் : ஓ அன்னை மரியே!

எல் : நீர் எப்போதும் எங்கள் பாதையில் மீட்பு மற்றும் நம்பிக்கையின் அடையாளமாக ஒளிர்கின்றீர். சிலுவை அடியில் நின்று இயேசு பட்ட பாடுகளில் பங்கெடுத்து, உமது நம்பிக்கையில் உறுதியாக இருந்தீர். நோயாளிகளின் ஆரோக்கியமே! எங்களை உம்மிடம் ஒப்புக் கொடுக்கிறோம்.

அனைத்துலக மக்களின் மீட்புக்குத் துணை நிற்கும் நீர், எங்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்து வழங்குவீர் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். ஆகவே, கலிலேயாவின் கானாவில் நடந்ததுபோல இந்த சோதனைக் காலத்திற்குப் பின் நாங்கள் எங்கள் மகிழ்ச்சிக்கும் கொண்டாட்டத்திற்கும் மீண்டும் திரும்புவோம் என நம்புகிறோம்.

எங்கள் துன்பங்களைத் தம்மேல் ஏற்றுக்கொண்டு, துயரங்களைச் சுமந்து கொண்டு, சிலுவை வழியாக உயிர்ப்பின் மகிழ்ச்சிக்கு எங்களை

வழிநடத்திய இயேசு கூறியபடி, தந்தையின் திருவுளத்திற்கு நாங்கள் இணங்கி வாழ்வதற்கு இறையன்பின் தாயே எங்களுக்கு உதவியருளும். ஆமென்.

ஓ இறைவனின் புனித அன்னையே, உமது பாதுகாப்பின்கீழ் நாங்கள் அடைக்கலம் தேடுகிறோம். மாட்சிக்குரிய புனித கன்னியே, சோதனைக்கு உட்பட்டிருக்கும் எங்கள் விண்ணப்பங்களைப் புறக்கணியாமல் எல்லா ஆபத்துகளிலிருந்தும் எங்களை விடுவித்தருளும்.

**– திருத்தந்தை பிரான்சிஸ்**

## ஆசியுரை

தலைவர் : நன்மையே உருவான இறைவன் நமக்குத் தம் அருளை அளித்து, ஆசீரைப் பொழிந்து, எல்லாத் தீமைகளினின்றும் நம்மைக் காத்தருள்வாராக.

எல் : ஆமென்.

தலைவர் : நம் புகலிடமாகிய இறைவன் நம் நம்பிக்கையை வளர்த்து, எதிர்நோக்கை உறுதிப்படுத்தி, நாம் இறுதிவரை அன்பிலும் அமைதியிலும் நிலைத்திருக்கச் செய்வாராக.

எல் : ஆமென்.

தலைவர் : கருணை மிகுந்த கடவுள் நம்மை இரக்கத்துடன் கண்ணோக்கி, நம் திட்டங்களும் முயற்சிகளும் விருப்பங்களும் நிறைவேறச் செய்வாராக.

எல் : ஆமென்.

தலைவர் : ஆண்டவர் நம்மை ஆசீர்வதித்து, தீமைகள் அனைத்தினின்றும் பாதுகாத்து நிலைவாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக.

எல் : ஆமென்.

தலைவர் : இறையன்பிலும் பிறரன்பிலும் வாழ்ந்து சான்றுபகரச் சென்று வருவோம். **அல்லேலூயா!**

எல் : இறைவா உமக்கு நன்றி! **அல்லேலூயா!!**

## பாடல் : உயிர்ப்புப் பாடல்